**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | | 38/2021 |
| | | D/W's | : | DW2 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | K. மூர்த்தி | CASTE | : | |
| S/O | கருப்பையா | RELIGION | : | இந்து |
| VILLAGE | நீரேத்தான் | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | 60 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 26.11.2025**

**<u>முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பில் 2ம் சாட்சி ஆவேன். பிரதிவாதியை எனக்குத்தெரியும். வழக்கின் அனைத்து விவரமும் எனக்குத் தெரியும். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது தான். எனது தரப்பில் நிரூபணம் செய்ய எனது ஆதார் அட்டையை தாக்கல் செய்கிறேன். (**சாட்சியின் ஆதார் அட்டை – நகல்– பி.வா.சா.ஆ.4 ஆக <u>குறியீடு செய்யப்படுகிறது</u>**).

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. எனக்கு சுமாராக எழுதப்படிக்கத்தெரியும். நான் குடியிருப்பதாக சொல்லியிருக்கும் முகவரியில் 18 வருடங்களாக உள்ளேன், அதற்குமுன் ஐ.சி.ஐ.சி வங்கி பின்புறம் இருந்தேன். நான் சாட்சியம் அளிக்குமாறு அழைப்பாணை வரவில்லை, பிரதிவாதி அழைத்ததால் வந்தேன். இருதரப்பினர்களையும் எனக்குத்தெரியும். பிரதிவாதி எனக்கு நெருக்கமானவர் என்றால் சரிதான். வாதி வழக்கை பிரதிவாதி பொதுஇடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக தாக்கல் செய்துள்ளார். வழக்குச்சொத்தின் சர்வே எண் எனக்குத்தெரியாது.

2. சர்வே எண் தெரிந்தால்தான் வழக்குச்சொத்துப்பற்றி என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியும் என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்குத்தெரியும், நான் சொல்லி தயார் செய்யப்பட்டது. நான் எனது வாக்குமூலத்தில் வழக்குச்சொத்து புதுத்தெருவிற்கு மேற்குப்பக்கமும் அந்த சொத்திற்கு மேற்கே அம்மன் பாஸ்ட்புட் கடை உள்ளதாக சொல்லியுள்ள சொத்தும்

வழக்குச்சொத்தும் வெவ்வேறு சொத்துக்கள் என்றால் சரியல்ல. வாதிகளின் தாத்தாவை எனக்குத்தெரியும்.

3. வாதிகளின் முன்னோர்களுக்கு எவ்வாறு பாகம் பிரிக்கப்பட்டது என்பது எனக்குத்தெரியாது. எனக்கு வழக்குச்சொத்தின் யார் யார் கடை வைத்திருந்தது என்று மட்டும்தான் தெரியும், அந்தச்சொத்தைப்பற்றி வேறு விவரங்கள் எனக்குத்தெரியாது. பிரதிவாதி அவரது சொத்தை யாரிடம் கிரையம் வாங்கினார் என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நீதிமன்றத்திலிருந்து வழக்குச்சொத்தை அளந்து பார்த்தபோது நான் அங்கு இல்லை. பேரூராட்சி ஊழியர்கள் வழக்குச்சொத்து அருகில் உள்ள தெருவை அளந்தபோது நான் அங்கு இல்லை.

4. எனது நிரூபண வாக்குமூலத்தில் புதுார் போகும் தெருவிற்கு மேற்கே பொதுவான இடம் இல்லை என்று சொல்லியுள்ளது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதி எனது நெருங்கிய நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/-M.P.Ramkisore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி